258, எம் வின்சென்ட்
பெரேரா மாவத்தை
கொழும்பு 14
0114700800

# யூனிலீவர் நிறுவனத்தின் வீவா வர்த்தகநாமம் இப்புத்தாண்டில் 500 குடும்பங்களுக்கு உதவியுள்ளது

*பாதிப்பிற்குள்ளான சமூகங்களுக்கு உதவி தேவைப்படும் இந்த தருணத்தில் நிவாரணம் அளித்துள்ளது*

**கொழும்பு, மே 17, 2022:** யூனிலீவர் ஸ்ரீலங்கா நிறுவனத்தின் மோல்ற்று அடங்கிய உணவுப் பான வகை வர்த்தகநாமமான வீவா, சிங்கள மற்றும் தமிழ் புத்தாண்டைக் கொண்டாடும் வகையில், தம்பன என்ற இடத்தில் வசிக்கும் 500 குடும்பங்களுக்கு உதவும் முகமாக, சுவர்ணவாஹினி தொலைக்காட்சி அலைவரிசையுடன் இணைந்து, யூனிலீவர் தயாரிப்புகள் மற்றும் உலர் உணவுப் பொருட்களை அண்மையில் நன்கொடையாக வழங்கியுள்ளது.

வீவா என்பது மோல்ற்று அடங்கிய ஒரு உணவுப் பானமாகும், இது தினசரி உணவு மற்றும் உடற்பயிற்சி திட்டத்தின் ஒரு பகுதியாக உட்கொள்ளப்படுகிறது. அதன் செறிவான பாலேடு மற்றும் மோல்ற்று சுவை எந்தவொரு கோப்பை தேநீரையும் கெட்டியாகவும், பாலேடு நிறைந்ததாகவும், சுவையாகவும் மாற்றுகிறது. வீவாவை தினசரி ஒரு முறை பருகும் போது விட்டமின்கள் பி1, பி2, பி3, விட்டமின் சி, கல்சியம், இரும்புச்சத்து மற்றும் பொஸ்பரசு ஆகியவற்றுடன் குடும்பங்களை நாள் முழுவதும் சுறுசுறுப்பாக வைத்திருக்கும் ஆற்றலை வழங்குகிறது.

முன்னெப்போதும் முகங்கொடுத்திராத வகையில் தற்போதைய காலகட்டங்களில் பாரிய கஷ்டங்களை எதிர்கொள்பவர்களுக்கு உதவும் நல்லெண்ணத்துடன், புத்தாண்டின் விடியலுடன் வீவா தனது ‘*Piripun Rasa Avuruddak’* முயற்சியை ஆரம்பித்தது. இந்த வர்த்தகநாமம் தம்பன கிராமத்தில் வசிக்கும் சமூகத்திற்கு உதவுவதற்காக அங்கு விஜயம் செய்து, தம்பன ஆரம்ப பாடசாலையில் வைத்து, 500 க்கும் மேற்பட்ட குடும்பங்களுக்கு யூனிலீவர் தயாரிப்புகள் மற்றும் உலர் உணவுகளை வேடுவ சமூகத்தின் தலைவரான உருவாரிகே வன்னில அத்தோவின் ஆசியுடன் விநியோகித்துள்ளது.

**யூனிலீவர் ஸ்ரீலங்கா நிறுவனத்தின் ஊட்டச்சத்து தயாரிப்பு வகைகளுக்கான தலைமை அதிகாரியும், யூனிலீவர் ஃபூட் சொலூஷன்ஸ் இன் தலைமை அதிகாரியுமான மிலிந்த வீரசிங்க** அவர்கள் கருத்துத் தெரிவிக்கையில், *“தலைமுறை தலைமுறையாக பல மில்லியன் கணக்கான இலங்கை மக்களுக்கு ஊட்டமளித்து வரும் வீவா, தனது செயற்பாடுகள் அனைத்திலுமே எமது நுகர்வோரின் தேவைகளுக்கு முதலிடம் அளித்து, அவற்றைப் பூர்த்தி செய்யும் கருணை மிக்க குடும்ப வர்த்தகநாமமாக தனது உண்மையான ஸ்தானத்தைக் கட்டிக்காத்து வந்துள்ளது. இதனாலேயே, மக்களின் அவல நிலையைப் புரிந்து கொண்டு, வழமை போல் புத்தாண்டைக் கொண்டாட முடியாதவர்களுக்கு உதவும் வகையில், அவர்களின் தேவைகளை நிவர்த்தி செய்து, குடும்பங்களை அன்னியோன்னியமாக ஒன்றிணைந்து மகிழச் செய்தோம். இந்த இக்கட்டான நேரத்தில் சுவர்ணவாஹினி தொலைக்காட்சி அலைவரிசையுடன் கைகோர்த்து தம்பன சமூகத்தினரை அவர்களின் புத்தாண்டு நேரலை ஒளிபரப்பு நிகழ்ச்சியில் இணைத்துக் கொள்ள வாய்ப்புக் கிடைத்தமை எங்களுக்கு கிடைத்த பெரும் பாக்கியம்,”* என்று குறிப்பிட்டார்.

இந்நிகழ்வுகளில் யூனிலீவர் ஸ்ரீலங்கா நிறுவனத்தின் ஊட்டச்சத்து தயாரிப்பு வகைகளுக்கான தலைமை அதிகாரியும், யூனிலீவர் ஃபூட் சொலூஷன்ஸ் இன் தலைமை அதிகாரியுமான மிலிந்த வீரசிங்க; யூனிலீவர் ஸ்ரீலங்கா நிறுவனத்தின் ஊடகங்கள் மற்றும் விளம்பர செயற்பாடுகளின் தலைமை அதிகாரியான சன்ன தென்னகோன் மற்றும் இலங்கையின் முன்னணி நட்சத்திரங்களுடன் இணைந்து யூனிலீவர் நிறுவனம், மைண்ட்ஷெயார் விளம்பர நிறுவனம் மற்றும் விங்ஸ் பிராண்ட் ஆக்டிவேஷன்ஸ் நிறுவனம் ஆகியவற்றின் அதிகாரிகளும் கலந்து சிறப்பித்துள்ளனர்.